செ.வெ.எண்-67 நாள்-28.08.2019

## அரியலூர் மாவட்டத்தில் அம்மா திட்ட முகாம்கள் 30.08.2019 அன்று நடைபெறுகிறது.

அரியலூர் மாவட்டத்தில் ஒவ்வொரு வட்டத்திலும் ஏழாவது கட்டமாக **அரியலூர் மற்றும் உடையார்பாளையம் வட்டங்களில்,** வட்டத்திற்கு இரண்டு கிராமத்திலும், **செந்துறை** மற்றும் **ஆண்டிமடம்** வட்டத்தில் ஒரு கிராமத்திலும் அம்மா திட்ட முகாம் **30.08.2019** அன்று வட்டாட்சியர்கள் தலைமையில் பின்வருமாறு நடைபெற உள்ளது.

**அரியலூர் வட்டத்தில்** சன்னாவூர் (வ), விளாங்குடி ஆகிய கிராமங்களிலும், **உடையார்பாளையம் வட்டத்தில்** தத்தனூர் (கி), கோடாலிகருப்பூர் ஆகிய கிராமங்களிலும், **செந்துறை வட்டத்தில்** வஞ்சினாபுரம் கிராமத்திலும், **ஆண்டிமடம் வட்டத்தில்** திருகளப்பூர் கிராமத்திலும் நடைபெறுகிறது.

இம்முகாமில் வருவாய்த்துறையின் சமூகப்பாதுகாப்புத் திட்டங்கள், இலவச வீட்டுமனைப் பட்டாக்கள், பிறப்பு, இறப்பு சான்றிதழ், சாதி சான்றிதழ் ஆகியவற்றில் தகுதி பெற்ற மனுக்களின் மீது உடனடியாக தீர்வு வழங்கப்படும்.

பொதுமக்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி, பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**